யோகாஸன ஆலய விஜயம்

மலர் 30	பிங்கள ஆண்டு மார்கழித் திங்கள் December—1977	இதழ் 12

வேடநெறி நில்லார் வேடம்பூண் டென்பயன்
வேடநெறி நிற்போர்வேடம்மெய் வேடமே
வேடநெறி நில்லார் தம்மை விறல்வேந்தன்
வேடநெறி செய்தால் வீடது வாகுமே.

தவக்கோலத்திற்குரிய பெருநெறியில் நிற்கும் ஆற்றல் இல்லாதவர், அக்கோலத்தினை மேற்கொண்டு நெறி தவறி வாழ்வதால் உண்டாகும் பயன்தான் யாது? தவக்கோலத்திற்குப் பொருந்தியவாறு செந்நெறி வழுவாது நிற்பின், அக்கோலமே உண்மையான சிவக்கோலமாகும். வேடம்பூண்டும் அவ்வழி ஒழுகாத தீய பண்பாளரை நாடாளும் மன்னவன் அவரை அந்நெறியில் நிற்கச் செய்தல் வேண்டும். அங்ஙனம் செய்தால் நாட்டிற்கும் நற்றவத்தோர்க்கும் நல்லின்பம் தருவதாகும்.

திருமூலர்.

சந்தா விபரம்	உள்நாடு	சிலோன்	வெளிநாடு (கப்பல்)	விமானம்
ஆண்டு சந்தா	ரூ. 4—00	ரூ. 6—00	ரூ. 15—00	ரூ. 30—00
ஆயுள் சந்தா	ரூ. 50—00	ரூ. 80—00	ரூ. 150—00	ரூ. 300—00
தனிப்பிரதி	40 காசு	50 காசு	ரூ. 1—25	ரூ. 2—00

உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் பொன்மொழி

அருளமிர்தம்!

இறையருளால் ஆன்மா மலங்களினின்றும் விடுபட்டதும் பரிசுத்தமாகி விழிப்பு நிலையடையும். விழிப்பு நிலையில் உள்ளவரே ஆண்டவனைக் காணும் பேறுபெற்று அருள் அமிர்தத்தைப் பருகியிருப்பர்.

பௌர்ணமி வகுப்பு

23—1—1978 திங்கட்கிழமை இரவு 6-30 மணிக்குக் கீழ்க் காணும் இடங்களில் வகுப்பு நடைபெறும். யாவரும் கலந்து பயன் பெறுக!

1. யோகாசன ஆலயம் 16-A, வன்னியர் முதல் தெரு, சூளைமேடு, கோடம்பாக்கம், சென்னை-600 094.
2. அருள்மிகு மன்னார்சாமி கோயில், மன்னார்சாமி கோயில் தெரு, இராயபுரம், சென்னை-600013.

வேள்விப் பயிற்சி வகுப்பு

பிரதிமாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையன்று ஷை சூளைமேடு யோகாசன ஆலயத்திலும், கடைசி ஞாயிற்றுக்கிழமையன்று, புரசைப்பாக்கம் செல்லப்பகிராமணி தெரு, எண் 13, இல்லத்திலும் வேள்விப் பயிற்சி வகுப்பு நடைபெறும். யாவரும் கலந்து கொள்க!

வேதாந்த சொற்பொழிவு

(மகளிர் பிரிவு)

சென்னை இராயபுரம் சிங்காரத் தோட்டம் ஏழாவது சந்து சேணியம்மன் கோயிலில், பிரதி திங்கட்கிழமை இரவு 6-30 மணிக்கு மகரிஷி தாயுமானவர் பாடலுக்கு வேதாந்த விளக்கவுரை நடைபெறுகிறது. யாவரும் கலந்துகொண்டு அறிவு விளக்கம் பெறுக!

பிரசாரகர் R. சாந்தி B.Sc.,
'செயலர் யோகாசன ஆலய
மகளிர் பிரிவு.

மகரிஷி தாயுமானவர்

தன்னையொருவர்

திரு. கோ. மு. சுவாமி அவர்கள்

நிகழ்த்திய உரை விளக்கம்.

உய்யும் படிக்குன் றிருக்கருணை
யொன்றைக் கொடுத்தால், உடையாய்!
பொய்யு மவாவு மழுக்காறும் [பாழ்ம்
புடைபட் டோடு(ம்) ; நன்னெறியா
மெய்யு மறிவு பெறும் பேறும்
விளங்கும்; எனக்கு னடியார்பாற்
செய்யும் பணியுங் கைகூடும்;
சிந்தைத் துயரந் தீர்ந்திடுமே.

பதவுரை

(இ - ள்.) உய்யும்படிக்கு - கதி யடையும்பொருட்டு, உன் - தேவரீருடைய, திருக்கருணை ஒன்றை - திருவருளொன்றினை, கொடுத்தால் - கொடுத்தனையாயின், உடையாய் - எல்லாமுடையவனே! பாழ் பொய்யும் – பாழாகிய அசத்தியமும், அவாவும் – ஆசையும், அழுக்காறும் - பொருமையும், புடைபட்டு - புடைபெயர்ந்து, ஓடும் - ஒழியும், நல்நெறிஆம் - நன்மார்க்கத்திற்கேதுவாகிய, மெய்யும் - சத்தியமும், அறிவு பெறும் பேறும் - அறிவினுற் பெறும் பிரயோசனமும், விளங்கும் - பிரகாசிக்கும், எனக்கு - அடியேனுக்கு, உன் - தேவரீருடைய, அடியார்பால் செய்யும் - அடியவர்களிடத்துச் செய்ய வேண்டிய, பணியும் - தொண்டும், கைகூடும் - கைவசப்படும் ; சிந்தை துயரம் - மநோ வியாகுலம், தீர்ந்திடும் - நீங்கிப்போம், என்க,

கருத்துரை

முன் பாடலில் சுவாமிகள் பற்றனைத்தும் மாயையின் விகாரமாதலின் அனைத்தும் பொய்யென்றறிந்து நின்னருள்பெற மனம் ஒருமைப்பட்டு நிற்கவில்லையே! எவ்வாறு நற்கதியடைவேன்? என்று இறைஞ்சி

நின்றார். இப்பாடலில், எல்லாம் உடையவனே! நான் நற்கதியடையும் பொருட்டு நின் திருவருள் கிட்டுமாயின் பொய்ம்மையும், ஆசையும், பொறாமையும் அடியோடு நீங்குவதுமன்றி, நன்னெறிக்குக் காரணமாகிய சத்தியமும், அறிவினாற்பெறும் பயனும் பிரகாசிக்கும்; நின்னன்பர் பணியும் கைகூடும்; சிந்தை துயரமும் நீங்கிடும் அல்லவா? என்கிறார்.

விரிவுரை

ஆன்ம சாதனை செய்வோர் எத்துணை முயற்சி செயினும், குருவருள் இல்லையேல் கைகூடா. திருவருள் என்பது ஈண்டு, முதலில் மனம் ஒருமைப்படுதல். இதற்காகவே காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி இறைஞ்சினர் சான்றோர். முதலில் ஒரு எண்ணும் இல்லாமல் எத்துணை பூச்சியங்கள் எழுதினும் அவை மதிக்கப்பெறா. அவற்றின்முன் ஏதாவதொரு எண் எழுதினால் அத்துணைப் பூச்சியங்களும் தனக்குரிய மதிப்புப் பெறுமாறுபோல, சாதகன் திருவருள் என்கிற எண் இல்லாமல் எத்தனைவிதமான சாதனைகள் புரியினும், மேற்சொன்ன இலக்கமில்லாத பூச்சியங்களை ஒத்ததேயாகும். "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்ற மணிவாசகரின் திருவாக்குப் பொய்யாமோ?

இதுபற்றியே தாயுமானாரும், இறைவா! அனைத்துக்கும் முதல்வனே! நான் உய்யும்பொருட்டுச் செய்யும் சாதனைக்கு நின் திருக்கருணையாகிய நோக்கு அளிக்கலாகாதா? நான் எவ்வாறு நற்கதியடைவேன்? என, "உய்யும்படிக்குன் திருக்கருணை ஒன்றைக் கொடுத்தால் உடையாய்" எனக் கேட்கின்றார்.

சஞ்ஜித கர்மாவாகிய பழவினையின் தொகுதி, பிராரர்த்த கர்மாவாகிய நிகழ்வினையில் ஒரு பகுதியை அனுபவிக்கச் செய்து, மிகுதியை ஆகாமிய கர்மாவாகிய பிறவிக்கு வித்தாக அமைகிறது. இதைத் தவிர்ப்பதற்கே திருவருளின் துணை வேண்டினர் அருளாளர். உள்ளத்தில் எழும் ஒவ்வொரு எண்ணமும் வினைப்பயனேயாம். எண்ணங்கள் ஆன்மாவில் பதிவாகின்றன. அவை கர்மாவுடன் கலந்து வெளிப்படுகின்றன. அவரவர் வினைக்கேற்ப காம, குரோத, லோப, மத, மாச்சரியம், டம்பம், அகங்காரம், ஈரிசை, அசூயை ஆகிய குணங்களில் கலக்கின்றன. அசத்தியமாகிய இவை (மெய்) சத்தியமெனச் சாதித்தும் நிற்கின்றன. இவை பரம்பொருளின் திருவருள் கூடப்பெறின் இருக்கும் இடம் தெரியாமல் ஒளி வந்ததும் இருள் மறைவதுபோன்று அகன்று விடுகின்றன. சுவாமிகள் இங்கு அதனை "பொய்யும் அவாவும் அழுக்காறும் புடைபட்டோடும்" என குறிப்பிடுகின்றார்.

"யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற"—அஃதாவது,

'யாம் உண்மையாகக் கண்ட பொருள்களுள், வாய்மையைவிட எத்தன்மையாலும் சிறந்தவைகளாகச் சொல்லத்தக்கவை வேறு இல்லை' என பொதுமறை கூறுகின்றது. ஒருவர் பன்னிரு ஆண்டுகள் வாய்மையைத் தவறாது கடைப்பிடித்தால் அவர் வாக்கு திருவாக்காகும்! அரிச்சந்திரன் இந்நெறியில் தலையாய இடம் வகிக்கின்றார். ஆனால் தாயுமானார் போன்ற அருளாளர்கள் தம்மைத் தாமே "பொய்

யினேன் புலையினேன் கொலையினேன்'' என்றெல்லாம் தாழ்த்திச் செப்பினமைக்குக் காரணம், அகந்தை அகற்றவே என்க!

அவா என்பது ஆசை. மனமாகிய குரங்கு ஆசையெனும் மரத்தின்மீது புலன்களாகிய கிளைகளின்வழி தாவிக்கொண்டே இருக்கின்றது. அறிவின்வழி வருவதற்கு மனக் குரங்கு மறுக்கின்றது. ''ஆசையெனும் பெருங்காற்றூடு இலவம் பஞ்செனவும் மனம் அலையுங் காலம் மோசம் வரும். இதனுல் கற்றதும் கேட்டதும் தூர்ந்து, முத்திக் கான நேசமும் நல்வாசமும் போய் புலனுயிற் கொடுமைபற்றி நிற்பர்'' என்பது தாயுமானுர் திருவாக்கு.

அழுக்காறு என்பது பொருமை; ஒருவரின் நன்னிலையைக்கண்டு பொறுத்துக்கொள்ளும் தன்மை இல்லாமை. ''வஞ்சனை அழுக்காருதி வைத்திடும் பாண்டமான நெஞ்சனை'' என்பதும் தாயுமானுர் தன்னைக் குறைத்துப் பேசுவதேயாகும்.

தங்களின் திறமையை வெளிப்படுத்த இரு வீரர்கள் போர்புரி கின்றனரெனில், வெற்றிப் பெறுவது ஒருவரேயன்ருே? தோல்வியுற்றவர் மற்றவரை மீண்டும் வெற்றிகொள்ள வேண்டும் என்னும் முயற்சியில் ஈடுபடுவது அறிவுடைச் செயலே அன்றி பொருமை கொள்வது அறியாமை. பிரம்ம ஞானி யொருவரைக் கண்டு நானும் பிரம்ம ஞானம் அடையவேண்டும் எனும் இறையருளை நாடுவது நன்னெறியேயன்றி ஞானியைக் கண்டு பொருமை கொள்வதும் அறியாமையேயாம். இத்தகைய பொய்யும் அவாவும் அழுக்காறுகளெல்லாம் இறையருளை வேண்ட அகன்றுவிடும்.

இப் பொய்யறிவையகற்றி மெய்யறிவைப் பெறுவதே நன்னெறியாகும். மெய்யறிவு பெறுவது என்பது பதி, பசு, பாசம் எனும் முப்பொருளின் தன்மையை குருவழி நின்று பாசத்தை விலக்கி (பசு) சிவனை அறிந்து (பதி) இறைவனை அடைவதாகும். இது ஞானியரின் சத்சங்கத் தொடர்புகொண்டு வேத புராண இதிகாசங்களையும் கடந்து, மும்மலங்களற்று, ஜீவ தத்துவமுமற்று, யாருமறியாத வழியில் பிரயாணஞ் செய்வதாகும். ''ஆராரும் அறியாத சூதான வெளியில் வெளியாகின்ற துரிய மயமே'' என்பர் தாயுமானுரும். இத்தகைய செந்நெறியை விடுத்து, கொலை முதலாகிய வன்குணங்களை அமைத்து என்னை ஆளாகச் செய்தனையே நன்ருே என்று கலங்குகின்ருர் அடிகளார்;

கொல்லாமை எத்தனை குணக்கேட்டை நீக்குமக்
குண மொன்றும் ஒன்றிலேன்பால்
கோரமெத் தனைபட்ச பாதமெத் தனைவன்
குணங்களெத் தனைகொடியபாழ்ங்
கல்லாமை யெத்தனை யகந்தையெத் தனைமனக்
கள்ளமெத் தனையுள்ளசற்
காரியஞ் சொல்லிடினும் அறியாமை யெத்தனை
கதிக்கென் றமைத்தஅருளில்
செல்லாமை யெத்தனைவிர் தாகோஷ்டி யென்னிலோ
செல்வதெத் தனைமுயற்சி
சிந்தையெத் தனைசலனம் இந்த்ரசா லம்போன்ற
தேகத்தில் வாஞ்சைமுதலா

அல்லாமை யெத்தனை யமைத்தனை யுனக்கடிமை
யானேன் இவைக்கும்ஆளோ
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே.

கொங்கணர் எனும் சித்தர், நாம் செல்ல வேண்டிய வழியினை குறிப்பால் உணர்த்துகின்ருர்.

"அந்தரத்தை வில்லாக்கி ஐந்தெழுத்தை அம்பாக்கி
மந்திரத்தேர் ஏறியல்லோ மான்வேட்டை யாடுதற்கு
சந்திரருஞ் சூரியரும் தான்போன காவனத்தே
வந்துவினை யாடியல்லோ என் கண்ணம்மா
மனமகிழ்ந்து பார்ப்பதென்ருே."

எண்ணங்களற்ற வெட்டவெளியில் 'நமசிவய' எனும் ஐந்தெழுத்தின் துணைகொண்டு பிரணவம் எனும் தேரேறி மாயையை வெல்வதே இதன் பொருளாகும்.

வழிஇதென்றும் அல்லா வழியிதென்றும் சொல்லிற்
பழிபழியாம் நல்லருளாற் பார்த்தோர்—மொழிஉனக்கே
ஏற்றிருக்கச் சொன்னஅன்றே எங்கும் பெருவெளியாம்
பார்த்தவிடம் எல்லாம்நீ பார். என்றனர்.

குருவருளின் துணையால் கிடைக்கப்பெற்ற மகா மந்திரத்தினை நாளும் வைத்து வைத்துப் பார்த்துப் போற்றி வளர்த்துவருங் காலத்து பேதபுத்தி அகன்று, யாவற்றையும் அபேதமாய்க் காணும் தன்மை உண்டாகும். அதைவிடுத்து மீண்டும் உலக விவகாரங்களில் தலையிட்டு இது நல்ல மார்க்கம், இது தீய மார்க்கம் என்று விசாரணையில் பேதிலிக்கக்கூடாது என்பதே இதன் கருத்தாகும். இதனின்றும் குரு வழி நிற்கும் நெறியே செந்நெறியும் உண்மை நெறியுமாகும் என்பதை நிலை நாட்டுகின்ருர் தாயுமான அடிகளார். எனவே "மெய்யும் அறிவு பெரும்பேறும் விளங்கும்" என்றனர்.

பேறுகள் பதினறு எனப்படும். இவை இறைவனை நினைந்து மேற் சொன்ன வழியில் உறுதியாய்ப் பிரயாணஞ் செய்யச் செய்யக் கிட்டுவதாகும். ஒன்றை நினைந்து வேண்டுவது தவம். தன்னையும் மறந்திருப்பது யோகம் ஆகும். அந்நிலையில் செயலனைத்தும் பரம்பொருளைச் சார்ந்ததேயாகும். பின்வரும் கதையினின்றும் இதனை அறியலாம்.

சுகேசன் என்னும் அந்தணர் மகத நாட்டில் வாழ்ந்து வந்தார். அந்தணர் எனும் சொல்லுக்கு ஏற்ப அறநெறியில் தவருது ஒழுகினுர்; பிறவி, வீடுபேறு என்று இரண்டிரண்டாக கூறப்படும் சொற் பொருள்களை ஆராய்ந்தறிந்து அறத்தின்வழி செல்பவரின் பெருமையே உலகத்தில் உயர்ந்தது. இதனைத் திருக்குறள்;

"இருமை வகைதெரிந்து ஈண்டு அறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு"

எனப் பேசுகின்றது. வேதநெறியைக் கடைப்பிடித்து மனையாளோடு இல்லறம் நடாத்திவந்த இவர், வயல்களில் சிந்திக் கிடக்கும் தானியங்களைச் சேகரித்தும், போதாமைக்கு யாசகம் எடுத்தும் வாழ்நாளைக்

கழித்து வந்தார். அந்நேரம்போக மிகுதி நேரத்தை தியானம் செய்வதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார்.

மனைவி 'மனைத்தக்க மாண்புடையாளாகித் தற்கொண்டான் பேணி வளத்தக்காள் வாழ்க்கைத் துணை'வியாக விளங்கினாள். தியான வாழ்க்கைக்கு உறுதுணை நின்றாள். அன்றி தானும் இறைவழிபாடு இயற்றி வருவாளானாள். மாதங்கள் பல சென்றன; கர்ப்பிணியான இவள் பிரசவ காலம் நெருங்குவதையுணர்த்துவான் வேண்டி கணவனிடம், பிள்ளைப் பேற்றுக்கு வேண்டிய பொருள்களை நாம் சேமித்து வைக்கவில்லை. பேறுகாலத்தில் எனக்குத் துணையாக எவருமில்லை. தங்களின் தியான வாழ்க்கைக்கு இடையூறு விளைவித்துத் தங்களுக்குத் துன்பம் தரவும் நான் விரும்பவில்லை. எனவே என் தாய் வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்றால் தாயாரும் உடன்பிறந்தாரும் ஆவன செய்வார்கள். மூன்று மாதம் கழித்துத் திரும்பி வருகிறேன், என்று கூறினாள். மனைவியின் கருத்துக்கிசைந்த சுகேசன் அவ்வாறே அழைத்துக்கொண்டு புறப்பட்டான்.

காடும் மலையும் கடந்து நெடுந்தூரம் நடந்து சென்றதால் களைப்புத் தீர ஆலமரத்தடியில் தங்கினார்கள். சிலமணி நேரத்திற்கெல்லாம் அழகிய ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். ஆனால் அவளோ பிரசவ வேதனையால் உயிர் துறந்தாள். குழந்தையைக் கண்டு மகிழ்ந்த சுகேசன் மனைவியின் பிரிவாற்றாமையால் வருத்தமுற்று குழந்தையைத் தன் மடிமீது வைத்துக்கொண்டு கண் கலங்கினான். குழந்தையைச் சுத்தம் செய்து பாலூட்ட வேண்டும்; மனைவியின் உடலைத் தகனம் செய்ய வேண்டும்; எதைச் செய்வதென திகைத்தான்; இறைவா! எல்லாம் உன் செயலே என்று குழந்தையைக் கீழே கிடத்தி விட்டு, மனைவியின் தகனத்திற்கு விறகு சேகரிக்கத் தீர்மானித்தான். நகத்தால் தன் தொடையைக் கீறினான்! பீறிட்டு வந்த இரத்தத்தைக்கொண்டு ஒரு இலையில் சுலோகத்தை எழுதினான்;

> "குழந்தைச் செல்வமே! தூய புனிதமான வெண்மை நிறத்தை அன்னப் பறவைகளுக்குத் தந்தவரும், கிளிகளை ஆழ்ந்த பச்சை நிறத்தால் அலங்கரித்தவரும், மயிலை கவர்ச்சிமிகு வண்ணத்தால் அழகுபடுத்தியவரும் எவரோ? அவரே உன்னையும் பாதுகாப்பார்"

சுலோகம் எழுதிய இலையை குழந்தையின் தலைக்கடியில் வைத்து விட்டுப் புறப்பட்டான். சுற்றித் திரிந்தான். தேவையான விறகுகள் கிடைக்கவில்லை. நெடுந்தூரம் சென்றபின் ஏரி தென்பட்டது. உச்சி வேளையானதால் ஏரியில் மூழ்கி சந்தியாவந்தனம் (நித்திய வழி பாட்டை) முடித்து தியானத்தில் அமர்ந்தான். விறகு சேகரிக்க வந்ததையும் மறந்து தீவிர தியானத்தில் ஆழ்ந்தான்.

என்னே இவரின் மனவுறுதி! தான் கொண்ட கொள்கையில் உறுதியும், பரம்பொருளின்பால் தளராத நம்பிக்கையும் அன்றோ காரணம்? பச்சிளம் குழந்தை நடுக்காட்டில் கிடக்கிறது! மனைவியின் உடல் சிதையை நோக்கி கிடக்கிறது! இவற்றின் இடையில் நிட்டைகூடுவது என்றால் சுகேசனின் மனம் பழுத்த நிலையை நாம் வியக்காமல் இருக்க முடியாதல்லவா? ஊட்டுவிப்பானும் உறங்குவிப்பானும் ஒருவன் உண்டன்றோ? படைத்தவனுக்கு காப்பதுவும் கடமையல்லவா? குழந்தை கிடந்த இடத்தில் மான்கள் கூட்டமாக வந்தன. தாய்மை உணர்ச்சி

பெருக்கெடுத்த பெண்மான் ஒன்று அக் குழந்தைக்குப் பால் ஊட்டியது; மற்ற மான்கள் சூழ்ந்துகொண்டு அக் காட்சியை ரசித்தன.

மகான்கள் பலரின் வாழ்க்கையில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. உதாரணமாக சுவாமி இராமதாசர், வீரத் துறவி விவேகானந்தர், தாயுமான அடிகளார், வள்ளலார் போன்றோரின் வாழ்க்கை குறிப்புகளினின்றும் இவற்றைக் காணலாம். ஆண்டாள், ஐயப்பன், விப்பிரநாராயணர், திருப்பாணாழ்வார், கபீர்தாசர் போன்றோரெல்லாம் குழந்தை வடிவில் கிடைத்தெடுக்கப்பட்டவர்கள்தாமே? சாதாரணமாக நம்முடைய வாழ்க்கையிலேயே எதிர்பாராத அதிசயிக்கத்தக்கச் சம்பவங்கள் நடைபெறுகிறதென்றால் அருளாளர்களின் வாழ்க்கையில் கூறவும் வேண்டுமா ?

இங்கே மான் பற்றி கூறும்போது, சிறிது தெளிவுபெற வேண்டியவர்களாகின்றோம். கூத்தப்பெருமானாகிய நடராஜ மூர்த்தியின் கரத்தில் மான் இருக்கக் காண்கிறோம். இது பிரகிருதி தத்துவத்தைக் குறிக்கின்றது. வடலூர் வள்ளற்பெருமான் வருமாறு கூறுகின்றார் ;

மானாகி மோகினியாய் விந்து வாகி
மற்றவையாற் காணாத வான மாகி
நானாகி நானல்ல னாகி நானே
நானாகும் பதமாகி நான்றான் கண்ட
தானாகித் தானல்ல னாகித் தானே
தானாகும் பதமாகிச் சகச ஞான
வானாகி வானடுவில் வயங்கு கின்ற
மௌன நிலை யாகிஎங்கும் வளருந் தேவே.

மகரிஷி தாயுமானவர்; "காணரிய.........மான்காட்டி மானை ஈர்க்கும் கொள்கையென அருள் மௌன குருவாய் வந்து" என்றும்,

"பாயப் புலிமுனம் மான்கன்றைக் காட்டும் படிஅகில
மாயைப் பெரும்படைக் கேஇலக் காஎனை வைத்தனையோ"

எனவும் கூறுகின்றனர். இம் மான் தத்துவத்தை குரு மாணாக்கர் விசாரணையில் நின்று தெளிக !

மான்கள் கூட்டமாக இருக்கும் இடம் நோக்கி அவ்வழி வந்த மன்னன் வியப்பெய்தினான்! அம்மான்கள் மருண்டோடவில்லை! மாறாக விலகி வழி கொடுத்தன. அங்கே உயிரற்றப் பெண்ணின் உடலும், பச்சிளங் குழவி உயிரோடு இருக்கவும் கண்டான். வியப்பும் திகைப்பும் அடைந்தான். குழந்தையை ஆதரவற்ற நிலையில் விடுத்து பெண்ணைக் கொலை செய்தவன் யாரோ ? என நாற்புறமும் ஆட்களை ஏவினான். கள்வர்தாம் நகைகளைக் கவர்ந்துகொண்டு இக் கொலையைச் செய்திருக்கவேண்டும் எனத் தீர்மானித்தான்.

ஏரிக்கரைப் புறமாகசென்ற ஏவலாட்கள் அங்கு நிட்டையிலமர்ந்திருந்த சுகேசனைப் பற்றி இழுத்து வந்தனர். இவனே கொலையாளி! தூக்கிலிடுங்கள் என்றான் அரசன். அனைத்தும் மறந்து நினைப்பு மறப்பு அற்று இருக்கின்ற நிலையிலும் இங்ஙனம் துன்பம் மூள்வது என்றால் இது வினைப்பயனல்லவா ? பட்டினத்தடிகள் சும்மாவிருந்த சமயம் பத்ரகிரி மன்னனால் பழி சுமத்தப்பட்டபோது,

என்செயலாவது யாதொன்றுமில்லை இனித்தெய்வமே
உன்செயலென்று உணரப்பெற்றேனிந்த ஊனெடுத்தப்
பின்செய்ததீவினை யாதொன்றுமில்லைப் பிறப்பதற்கு
முன்செய்ததீவினையோ இங்ஙனேவந்து மூண்டதுவே.

என்று பரமனை வேண்டினர்.

வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம் வேறொருவருக்கு
எட்டாதபுட்பம் இறையாத தீர்த்தம் இனிமுடிந்து
கட்டாதலிங்கம் கருதாதநெஞ்சங் கருத்தினுள்ளே
முட்டாதபூசையன்றோ குருநாதன் மொழிந்ததுவே

என்ற பட்டினத்தார் திருவாக்கிற்கிணங்க, முட்டாத பூசையை சுகேசன் புரிந்தபோது வினைப்பயன் முட்டுக்கட்டையாக வந்து நின்றது.

தன்னுணர்வு திரும்பிய சுகேசன் நிலைமையை யறிந்து நிகழ்ந்த வற்றை விளக்கியுரைத்தான். தான் கூறியது உண்மை என்பதை நிரூபிக்க குழந்தை தலையின்கீழ் தான் எழுதிவைத்த இலையையும் எடுத்துக் காண்பித்தான். சுகேசன் கூறிய சுலோகமும் இலையில் எழுதப்பட்டிருந்ததும் மாறுபடாமல் இருக்கக்கண்ட மன்னன் வியப்பும் வெட்கமும் அடைந்தான். சுகேசனின் திருவடிகளில் வீழ்ந்து ஆராயாமல் தீர்ப்பு சொன்னமைக்காக மன்னிப்புக் கோரினன். அன்றியும் தனக்குக் குழந்தைப்பேறு இன்மையால் தானே அக்குழந்தையை எடுத்து வளர்த்துக்கொள்வதாகவும் வேண்டினன், சுகேசனும் அதற்குச் சம்மதம் தெரிவித்தபின் அரசனின் துணையோடு மனைவியின் உடல் தகனக் கிரியை ஏற்பாடு செய்யப்பட்டது. அரசன் மகிழ்ச்சி பொங்க குழந்தையுடன் விடைபெற்றான்.

இப்போது வினைகள்யாவும் அகன்று பிராரார்த்த வினையினின்றும் விடுபட்டு வினைக்கு வழியின்றி தனித்துநின்று நிட்டை கூடினன் சுகேசன்.

எறிதி ரைக்கடல் நிகர்த்த செல்வம்மிக
அல்லல் என்றொருவர் பின்செலா(து)
இல்லை யென்றுரை பேசிடா துலகில்
எவரும் ஆம்என மதிக்கவே
நெறியின் வைகிவளர் செல்வ மும்உதவி
நோய்கள் அற்றசுக வாழ்க்கையாய்
நியம மாதிநிலை நின்று ஞானநெறி
நிட்டை கூடவும் எந்நாளுமே
அறிவில் நின்றுகுரு வாய்உ ணர்த்தியதும்
அன்றி மோனகுரு வாகியே
அகில மீதுவர வந்த சீரருளை
ஐய ஐயஇனி என்சொல்கேன்
சிறியன் ஏழைநம தடிமை என்றுனது
திருவு ளத்தினில் இருந்ததோ
தெரிவ தற்கரிய பிரம மேஅமல
சிற்சு கோதய விலாசமே.

என்று தாயுமானவர் மொழிந்தவாறு எவரும் மதிக்கத்தக்க நிலையில் சுகேசனின் நிலை உயர்ந்தது.

சித்தர்களைப் போற்றிய தாயுமானுர்; "என்றைக்கும் அழியாத தவராச யோகராய் இந்த்ராதி தேவர்களெல்லாம் விஜய! ஜயவென்ன ஆசிசொலவே கொலு இருக்கும்நும் பெருமை எளிதோ?" என்கின்ருர். மனிதருள் மனிதராக, மாணிக்கமாக வாழ்பவர் சிலரே யாவர். வள்ளலாரைக் கண்ட சித்தரொருவர் மனிதரைக் கண்டேன்! என மகிழ்ச்சிக் கூத்தாடினுராம். பாம்பின் கால் பாம்பறியும் என்பதுபோல அவ்வத் தன்மை யுடையவரே அவரவரை அறிய முடியும்.

மனிதரிலும் பறவையுண்டு விலங்குண்டு கல்லுண்டு மரமுமுண்டு
மனிதரிலும் நீர்வாழுஞ் சாதியுண்டு அநேககுல மனிதருண்டு
மனிதரிலும் மனிதருண்டு வானவரும் மனிதராய் வருவதுண்டு
மனிதரில் பிறப்பறுக்க வந்ததே அருமை வகுத்தார் முன்னேர்—

என்பது சிவாநந்த போதம்.

இத்தகைய நெறியில் வாழ்ந்து வளர் செல்வத்தைப் பெறுதலே மானிடப் பிறவியின் பெரும் பயனுகும். பூவுலகிலும் அருளுலகிலும் இரண்டிலுமே ஏழையானுல் ஆத்ம சுகம் பெறுவதுதான் எவ்வாறு? எனவே "நோய்களற்ற சுகவாழ்க்கை .... ஐய ஐய இனிஎன் சொல்கேன்" என்கின்ருர் மகரிஷி.

உடல்நோய் என்பது வாத, பித்த, சிலேத்துமங்களால் வருவது. இதனை மருத்துவரின் துணைகொண்டு தீர்த்துக் கொள்ளலாம். பிறவி நோய்க்கு யாரிடம் செல்வது?

ஒருநாள் குருநானக் உடல்நிலை நலமற்றபோது மருத்துவர் வந்தனர். அப்போது அவர் கேட்டார்; நீங்கள் எனக்கு மருத்துவம் செய்யப்போவது உடலுக்கா? ஆத்மாவுக்கா? மருத்துவர் திகைத்து நின்றனர்! அதுபோல ஆன்மாவுக்கு மருந்து, இயமம் முதலான நெறிநின்று சமாதி கூடுதலே யாகும்? சமாதியில் சவிகற்பம், நிர்விகற்பம் என இரு தன்மையுள. நெருப்புப்பட்டதும் ஊதுவத்தி எரிந்துகொண்டே சென்று சாம்பலாவது நிர்விகற்ப சமாதி; நிறுத்தி நிறுத்தி எரிவிப்பது சவிகற்ப சமாதி; இது அறிவினுல் அறியுந் தன்மை. "ஆணிப்பொன் னம்பலத்தே கண்ட காட்சிகள் அற்புதக் காட்சியடி அம்மா! அற்புதக் காட்சியடி" என்று வள்ளலார் கூறியது இரண்டாம் நிலையைச் சார்ந்தது.

இதற்கு அறிவில் நின்று குரு உணர்த்த வேண்டும். குருவின் பலமில்லையேல் சறுக்கிவிழ வேண்டியதுதான். எனவே சுவாமிகள் "சிறியன் ஏழை நமதடிமை என்றுனது திருவுளத்தினில் இருந்ததோ?" எனக் குழைந்து கேட்கின்ருர்.

சுவாமிகள் இப்பாடலில், இறைவனை நினைந்து, உன்னுடைய திருவருள் ஒன்றனை அளித்தால் அறியாமை அகன்று மெய்யறிவு பெறும் பேறு உடையவனுகவும் உன்னடியார்க்குத் தொண்டு செயும் பணியும் கிடைக்கப் பெற்று என் சிந்தனையின் துயரமெலாம் அகன்று விடுமல்லவா? என்று "உய்யும்படிக்கு .....துயரம் தீர்ந்திடுமே" என்று வேண்டி நிற்கின்ருர்.

WINGS OF DIVINE WISDOM

by YOGI SIVALINGAM—U. S. A.

பாசமே பந்தம்,
சத்தியமே சுத்த நிலை,
பாசமே வாழ்வின் துன்பம்,
பாசமே வாழ்வின் மனம்,
மனமடக்கின் சித்தனுகலாம்,
மனமடக்கின் சுத்தனுகலாம்,
மனமடக்கின் பந்தமகலும்,
சித்தசுத்தியே சுக வாழ்வு,
சித்தசுத்தியே உய்விக்கும் வழி,
சித்தசுத்தியே உண்மை யோகுக்கும்,
சித்தசுத்தியே செறிந்த வாழ்வு.
Thoughts are the great desire,
Truth are the True life,
Thoughts are the darkness,
Thoughts are the life's zero;
Sense control, then become as great Siddhas,
Sense control, then become as great Divine Heart,
Sense control, then the thoughts are vanish,
Pure thoughts are Perfect life,
Pure thoughts are Perfect freedom and it gives free from the bondage,
Pure thoughts gives the Perfect inner knowledge,
Divine thoughts are the Deepest inner life.

Work for the wonderful Guru forever then you become a clear heart and joy with Guru forever.
Be steady to others, don't compare with others,
Don't worry for anything and leave it all to the Guru,
Be wise for others, be bold and depend on your Guru,
Be purity with Guru, be careful with others and moderate,
Sickness comes from thoughts, thoughts come from Karma,
You can leave it to the Guru when you have problems,
Guru is First and God lives with the Guru's Heart,
Guru has direct connection with the God.
How much joy from the Guru, that all with God,
How much you are so great. How much you are so glad, healthy, and wealthy.
Faith, Promise, Practical, innocent to Guru—these are the Great Pyramid Stones to uplift your life.

After sacrificing to the Lord and Guru there are no problems.
When you depend on Guru then you are not in this world-peoples,
Spiritualists never depend on the devotees or people,
Fear, worry, troubles, problems, anger, crying, imaginations, emotions, afraid always feeling very busy—these all are great demons for the Spiritualists.
More meditations will clear up the problems,
Don't compare with the people,
Don't depend on the people or devotees,
You belonging to your SOUL, GURU and the LORD,
Don't cry for anything,
Don't create to keep in your mind about finding the Lord,
Whatever you preach, all for the sake of the beloved Lord and the GURU, so don't bother for yourself, as you DID.
Whatever you did, leave it to the Lord, then you become a great GIANT; whatever may happen all for the LORD, then how joyful, happy feelings, and easy to work anything.

You can change your room,
You can change your ideas,
You can change your thoughts,
You can change your problems,
You can change your friends,
You can change your foods,
You can change your offices,
You can change your moods,
But don't change your GURU and the ONE practical spiritual. These will lead you to great progress-life-path. Be faithful, be steady, be cheerful, be vairagya and be free from the problems.

Life means gathering to know oneself,
Get thc divine-power-sweet-happy forever.
Keep with one Guru and be joyful with the divine love.
You can change your life with the Guru with one Goal.
Be with one and avoid many thoughts with others,
Don't be ant creature with this world,
So joyous, so happy, so pure, so devoted—whatever you want.

(Continued.)

சித்தர் கைகண்ட மருந்து

வைத்தியரத்னம் V. பலராமய்யா, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட நீதிபதி (ஓய்வு)

(முன்தொடர்ச்சி)

மண்ணீரல் வீக்கம் (Spleen enlargement)

கடல் நுரையை (ராமேஸ்வரம் கல்லென்பர்) சுண்ணும்பு நீரிலிட்டு வேகவைத்து சுத்தி செய்து தூள் செய்து சீமை குகையில் வைத்தூத சுண்ணமாகும். அரிசியிடை வெல்லத்தில் வைத்து உள்ளுக்குக் காலே, மாலே கொடுக்கவும். இப்படி 43 நாட்கள்வரை கொடுக்கவும். வீக்கம் குறையும்.

மேற்பூச்சு: ஆனல் இதற்கு மேற்பூச்சும் மிக முக்கியம். வீக்க மிருக்குமிடத்தின் மேல்புறம் புற்று மண்தூள் ஜலித்துக்கொண்டு தண்ணீரில் வெண்ணெயைப்போல் கலக்கி மேலே போடவும்.

குழந்தைகளுக்கு வரும் சிரங்குகளுக்கு

சிரங்கு குழந்தைகளுக்கு வருவது நல்லது. இது வெப்ப மிகுதியால் வருவது. உடலினுள்ளிருக்கும் துர்நீர் வெளியாகிவிடும். இல்லா விடில் வேறுவிதமான பிணிகளாய்ப் பரிணமிக்கும். ஆயினும் இதை உடனடியாக குணப்படுத்துதல் சிறந்தது.

உள்ளுக்கு மருந்து: விளக்கெண்ணெயில் பூண்டு கொஞ்சம் தட்டிப்போட்டு பக்குவமாய்க் காய்ச்சி இரண்டு தேக்கரண்டியளவு உள்ளுக்குக் கொடுக்கவும் பேதியாகும். உள்ளிருக்கும் துர்நீர் அதில் வெளிப்பட்டுவிடும்.

மேலுக்கு பூச்சு: பூவரசன் பட்டையை காயவைத்து இடித்து தூளாக்கி தேங்காயெண்ணெயிலிட்டு வெய்யிலில் 3 நாட்கள் வைத் தெடுத்து உடம்பில் தேய்த்து 2, 3 மணிநேரம் இருக்கச்செய்து அரப்பு இல்லாவிடில் சீக்காய் தேய்த்து குளிக்கச் செய்தால் 5 நாட்களில் குணமாகும்.

மற்ெறன்று: வெள்ளைக் காசுக்கட்டி வெந்நீரில் போட்டு குழம் பாகும் பதத்தில் எடுத்து சிரங்களுக்குத் தடவவும். 8 மணி நேரம் கழித்து சீக்காய்த் தேய்த்து குளிக்கவும்.

மற்றென்று: குப்பைமேனிச்சாறு 1 லிட்டர், தேங்காயெண் ணெய் 1 லிட்டர்; இரண்டையும் தைலப் பதத்தில் காய்ச்சி இறக்கும் சமயம் கரிமஞ்சள்தூள் 2 தேக்கரண்டி போட்டு கலக்கி ஆறியபின் வடிகட்டி வைக்கவும். இதை பச்சை எண்ணெய் என்பர். இதைப் புண்களுக்குத் தடவி சில மணிகள் கழித்துக் குளிக்கவும். 4, 5 நாட் களில் குணமாகும்.

குழந்தைகள் கக்குவானுக்கு

அலுமினிய பாத்திரத்தில் படிகாரத்தைப் பொரித்து வைத்துக் கொண்டு இரண்டு குண்டுமணியளவு வெந்நீரில் கலக்கி நாள் ஒன் றுக்கு 3 முறை கொடுக்க 5, 6 நாட்களில் குணமாகும்.

குழந்தைகள் இருமலுக்கு

குழந்தைகளுக்கு இடைவிடாமல் இருமல் காணும். மூச்சுவிடாமல் இருமி சங்கடப்படும். இது எந்த மருந்துக்கும் உடனே அசையாது. இந்த இருமல் உஷ்ணத்தினுல் வருவது. அபானத்தில் வாயு சேர்ந்துக்கொண்டு கீழ் நோக்காமல் அந்த வாயு மேல்நோக்கி சுவாசக் குழாய்களைத் தாக்கும்.

இதற்கு மருந்து: பூசு மஞ்சள் 10 கிராம் (மேல் தோலை நீக்கவும்), மிளகு 10 கிராம். இவைகளைத் தனித்தனியே பட்டுபோல் அரைத்து பிறகு ஒன்று சேர்த்து புட்டியிலடைக்கவும்.

அளவு: ஒரு சிட்டிக்கை பாலில் கலக்கி உள்ளுக்கு 4 மணிக்கொரு முறை கொடுக்க இரண்டு வேளைகளிலேயே குணப்படும். வேண்டுமாயின் மற்றும் இரண்டு வேளைகள் கொடுக்கலாம்.

பொது விதி

உடம்பில் சொரிந்தால் தண்டுதண்டாவதற்கு

சுண்ணும்பு நீர் 10 அவுன்ஸ், நல்லெண்ணெய் 5 அவுன்ஸ், இரண்டையும் கலக்க தயிர்போலாகும். அதை உடம்பில்பூசி உலர்ந்த பின் கசகசா அரைத்து அதன்பேரில் பூசி $\frac{1}{2}$ மணிநேரம் ஊறவைத்து இளவெந்நீரில் குளிக்கவும்.

இந்திரியம் கட்ட

பருத்திக்கொட்டை	200 கிராம்	சீனு கற்கண்டு	250 கிராம்
வெள்ளரி விரை	150 கிராம்	பசும்பால்	1 லிட்டர்
மலாம்பழ விரை	150 கிராம்	நெய் $\frac{1}{2}$ லிட்டர்	
கசகசா	150 கிராம்	லவங்கப்பட்டை	10 கிராம்
முருங்கை பிசின்	150 கிராம்	ஏலக்காய்	10 ,,
		லவங்கம்	10 ,,

செய்முறை: பருத்திக்கொட்டை, வெள்ளரி விரை: மலாம்பழ விரை, கசகசா எல்லாம் கொஞ்சம் தண்ணீர்விட்டு அரைத்துப் பிழிந்து பால் எடுத்துக் கொள்ளவும். பசும்பாலில் சீனு கற்கண்டைப் பொடி செய்து போட்டுக் காய்ச்சவும். லவங்கப்பட்டை, லவங்கம், ஏலக்காய் எல்லாம் நெய்விட்டு வறுத்துத் தூள்செய்து காய்ச்சின பாலில் கலந்து பிறகு பிசினை கலந்து எடுத்து வைக்கவும்.

குறிப்பு; முருங்கைப் பிசினை உலர்த்திப் பொடி செய்துகொள்ள வேண்டும்.

தீரும் வியாதி: நீற்றுப்போன இந்திரியம் கட்டும். மேகவெட்டை, மேகரணம் முதலியன குணமாகும்.

உபயோக முறை: மாதம் ஒன்றுக்கு 7 நாட்கள் காலை, மாலை சாப்பிடவும். அப்படி 4, 5 மாதங்கள் சாப்பிடவும்.

வெட்ட வெளி

S. முருகேச பாண்டியன், B.E.,

"பாராதி அண்டங்கள் அத்தனையும் வைக்கின்ற பரவெளியின் உண்மை காட்டி" என்று தாயுமானவர் கூறிய வெட்ட வெளியாகிய ஆகாசத்தைப்பற்றி விஞ்ஞானம் கூறுவதைச் சிறிது பார்ப்போம். ஆகாசம் எனப்படும் வெட்ட வெளியானது பொருட்களுக்கு இடையிலும் மற்றும் உள்ளும் கூடப் பரவி நிற்கின்றது.

பூமியைப் போலவே மற்றுமுள்ள கிரகங்களும் சூரியனைச் சுற்றிச் சுழன்று வருகின்றன. சூரியனைப்போன்று ஒளிவிடும் பல்வேறு கோளங்களே நட்சத்திரங்களாகும். இந் நட்சத்திரங்கள் யாவும் கூட்டம் கூட்டமாய் இருக்கின்றன. ஒவ்வொரு கூட்டமும் நீர்ச் சுழல்போல் சுழன்று வருகின்றது.

ஒளியானது விநாடிக்கு 1,86,000 மைல் வீதம் செல்கின்றது. இவ்வாறு அது ஓர் ஆண்டில் செலலும் தூரம் ஓர் ஒளி ஆண்டு எனப் படும். மேற்கூறிய நட்சத்திரக் கூட்டம் ஒவ்வொன்றும் பல்லாயிரம் ஒளி ஆண்டு குறுக்களவு உடையது. இரு நட்சத்திரக் கூட்டங்களுக்கு இடையேயுள்ள தூரமானது பல இலட்சம ஒளி ஆண்டுகளாகும, அண்டங்களுக்கு இடைய்ே பரவியுள்ள பெருவெளியானது அணுக்களினூடும் ஊடுருவி நிற்கிறது.

எப்பொருளையும் தொடர்ந்து பகுத்துக் கொண்டே சென்றால் எளிதில் பிரிக்க இயலாத நுண் பொருளாக ஆகி விடுகிறது. அதுவே அணுவெனப்படும. அணுவின் குறுககளவு ஓா அங்குலத்தில 25 கோடியில் ஓர் பங்காகும. அணுவின மையத்தல் அணுவின உட்கரு உள்ளது. அதன் எடை முழுதும் அதன் உட்கருவிலேயே உளளது. உட்கருவைச் சுற்றி எலக்ட்ரானகள் எனப்படும நுண்ணணுக்கள் சுற்றி வருகின்றன. உட்கருவின் அளவு அணுவின் அளவைவிட இலட்சத் தில ஓர் பங்காகும். உட்கருவினுள் புரோட்டான்கள் மற்றும நியூட் ரான்கள் ஆகிய நுண்ணணுக்கள் பொதிந்திருக்கின்றன.

அணுக்களின் இடையேயும் அதன் உள்ளும் வெளியேயும் ஊடுருவி நிற்கின்றது. எல்லாப் பொருள்களும் பெரிதும் வெளியாகவே இருக்கின்றன. இப் பூமி முழுவதையும் அதனிடையே வெளி ஏது மின்றிச் சுருக்கினால் அது ஓர் டென்னிஸ் பந்தின் அளவுக்குச் சுருங்கி விடுகின்றது. சூரியனில் அவ்வணு சுருக்கப்பட்டால் சுமார் இரண்டு மைல் குறுக்களவுளள ஓர் கோளமாகிறது. வெட்டவெளியினைப்பற்றி அறிந்து கொண்டபின் சக்தியைப்பற்றியும், அதன் பின்னர் வெறு வெளியில் சக்தி செயல்புரியும் விதத்தைப்பற்றியும், பிரபஞ்ச உற்பத்தி மறைவு ஆகியவைபற்றியும் அறிந்து கொள்ளலாம்.

மகளிர் அங்கத்தினர் பொதுக்கூட்டம்

யோகாசன ஆலய மகளிர் அங்கத்தினர் பொதுக்கூட்டம் 3—12—77 அன்று மாலை 6 மணிக்கு சென்னை இராயபுரம் அருள்மிகு மன்னுர்சாமி கோவிலில் நடைபெற்றது. ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் தலைமை வகித்தனர். திருமதி விலாசவதி கந்தசாமி (துணைச் செயலர்) வரவேற்புரை நிகழ்த்தினர்.

செல்வி வத்சலா, திருமதிகள் கௌரி, சந்திரமணி, சாந்தகுமாரி, A. ராஜலட்சுமி, நாகரத்தினம்மாள், T. சுந்தரம்மாள், வசந்தா கணேசன், காளீஸ்வரி வைரவன், M. வசுந்தரா முருகேச பாண்டியன், இராஜம்மாள் நரசிம்மலு, S. இராஜம்மாள், N. இராஜம்மாள் ஆகியோர் தங்களின் பொன்னுன கருத்துரைகளை வழங்கினர்.

R. சாந்தி B.Sc., (செயலர்) அவர்கள், 1977ஆம் ஆண்டு அறிக்கையைப் படித்து உரையாற்றுகையில்; மகளிர் அனைவரும் விடா முயற்சியுடனும் தளரா நம்பிக்கையுடனும் யோகாசன ஆலயத்திற்குத் தொடர்ந்து வருகைதந்து அன்பர்பணி புரிவீர்களாயின்! பதினுறு பேறுகளும் தானே வந்தடையும் என திடநம்பிக்கையுடன் கூறினுர்.

தலைவர் அவர்கள், ஒவ்வொருவரின் சேவையையும் தனித்தனிப் பாராட்டியதுடன், கட்டுப்பாட்டுடன் இருந்து கடமையைச் செய்து வருவதே மகளிர் பிரிவு நாளும் ஆலவிருட்சமாக செழித்து வளர்வ தற்குக் காரணம் என்றுர். சென்னையைப்போன்றே விருதுநகரிலும் மகளிர் பிரிவினர் முழுநம்பிக்கையும் கட்டுப்பாடும் கொண்டுள்ளதால் வளர்ந்து வருகின்றனர் என்று பெருமகிழ்வு கொண்டார்.

செல்வி R. சாந்தி B.Sc., அவர்கள் நன்றியுரையுடன் கூட்டம் புத்துணர்ச்சியுடன் நிறைவேறியது.

நன்றி !

25—11—77 அன்று சென்னையில் நடைபெற்ற கார்த்திகைப் பௌர்ணமி 1008 தீப விழாவுக்கு சென்னை, விருதுநகர் இராஜபாளையம் மற்றும் பல்வேறிடங்களிலிருந்தும் நன்கொடைகள் வழங்கியும் விழா சிறப்புற அமையவும் அன்பர் பணி செய்த அனைவர்க்கும் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

J. ஹரிஹரகிருஷ்ணன்
(கார்த்திகைவிழா அமைப்பாளர்)




Lions Club of Perambur, in appreciation of the good work done by Yogasana Alayam decided to encourage us by donating bed carpets for practicing Yogasanas. Lion M. H. Cassim Sait, Past District Governor, Lions International Dist. 324A, is seen here presenting a token gift packet to our General Secretary Mr. C. Ramaswamy on Tuesday the 15th November '77 on the occasion of the official visit of District Governor to their club

---

மார்கழித் திங்கள் வழிபாட்டு விழா !

16—12—77 காலை 6 மணிக்கு, சென்னை வண்ணையம்பதி பேரம்பாலு செட்டித் தெரு, அருள் மிகு கோதண்டராமர் கோவிலில் தொடங்கியது. ஆலய தலைவர் உயர்திரு. கோ. மு. சுவாமி அவர்கள் தலைமை வகித்து உரையாற்றினர். திருவாளர். M. திருஞானசம்பந்தன் அவர்கள் திருவிளக்கேற்றினர். புலவர். திரு. பா. ஆழ்வார் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. திரு. S. K. மலைக்கனி வரவேற்புரையும் திரு. C. இராமசாமி நன்றியும் நவின்றனர்.

தொடர்ந்து 13—1—1978 வரை மார்கழித் திங்கள் முழுமையும் அருளிசையும் அருளுரையும் நடைபெறும்.



கார்த்திகை தீப விழா

சென்னை திருவொற்றியூர் நெடுஞ்சாலை நெ. 194 நல்லதம்பி சேதுராமன் திருமணமண்டபத்தில் 25—11—77 மாலை 5·30 மணிக்கு நடைபெற்றது யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் திருவிளக்கேற்றிவைத்தனர். திரு. C. இராமசாமி (உபதலைவர்) அவர்கள் ஓங்காரக் கொடி ஏற்றினர். பிரசாரகர் R. சாந்தி B.Sc., பிரார்த்தனை பாடியபின், யோகாசன ஆலய விஜயம் இதழிலிருந்து மணிக்கருத்துக்களைப் புலவர். பா. ஆழ்வார் படித்தனர். 30 நிமிடங்கள் தியானம் கடைப்பிடிக்கப்பட்டது. திரு. V. A. கெங்குராஜ் நன்றி நவின்றார். திருமதி. P. K. ஞானம் இறைவணக்கம் பாடியபின் விழா சிறப்புற நிறைவு பெற்றது.

திருமணம்

யோகாசன ஆலய அன்பர் திருவாளர் A. கடற்கரைச் சாமிக்கும், புதுச்சூரங்குடி அ. சேர்மச்சாமி நாடார் மகள் செல்வி பாக்கியலட்சுமிக்கும் 14—12—77 அன்று, புதுச்சூரங்குடியில் திருமணம் நடைபெற்றது. ஆலய துணைச் செயலர் திரு. S. K. மலைக்கனி அவர்கள் மணவிழாவுக்குத் தலைமை வகித்தார். ஆலய சார்பில் வாழ்த்திதழ் அளிக்கப்பட்டது. இவர்களின் திருமண நினைவாக ஆலய வளர்ச்சிக்கு ரூ 16 நன்கொடை வழங்கினர்.

15—12—77 காலை 10-30 மணிக்கு, திருவாளர் K. C. S. காசி நாடார், காந்திமதி அம்மையார் அவர்களின் மகன் செல்வன் K. அசோகனுக்கும், திருவாளர் C. T. சிதம்பரநாடார் அவர்களின் மகள் செல்வி ரேவதிக்கும், சென்னை வண்ணையம்பதி G. A. ரோடு மங்கையர்க்கரசி பவனத்தில் திருமணம் நடைபெற்றது. ஆலய சார்பில் வாழ்த்துமடல் வாசித்தளிக்கப்பட்டது.

விருதுநகரில் ஆலய தலைவர்!

யோகாசன ஆலய தலைவர் உயர்திரு. கோ. மு. சுவாமி அவர்கள் 7—11—77 அன்று விருதுநகர் சென்றார். திருவாளர் ஆறுமுக நாடார் A. சிவசங்கரன் மற்றும் ஆலய அன்பர்களும் அன்போடுவரவேற்றனர்.

நாள்தோறும் காலை 9-30 முதல் 11 மணி வரை, விருதுநகர் யோ. ஆ. மகளிர்பிரிவு செயலர் திருமதி K. மகமாயி அம்மையார் இல்லத்தில், வேதாந்த விசாரணை, தாயுமானவர் பாடல் விளக்கவுரை வகுப்பும் சுவாமி அவர்களால் நடத்தி வைக்கப்பட்டது. காலை 6 மணிக்கு யோகாசனங்கள் பயிற்சியும் அளித்தனர்.

11—11—77 பகல் 12 மணிக்கு, திருமதி. S. சுந்தரலக்ஷிமி அவர்களின் இல்லத்தில் வேத வேள்வி நடாத்தினார்கள்.

பாபவிநாசம்

12—11—77 சுவாமிஜி அவர்களோடு அன்பர்களும் பாபவிநாசம் வந்தனர். அகஸ்த்தியர் நீர்வீழ்ச்சி சென்று, கல்யாண தீர்த்தத்தில் அனைவரும் மௌனம் இருந்தனர்.

இராஜபாளையம்

பாபவிநாசப் பயணம் முடித்து இரவு இராஜபாளையம் தங்கி 13—11—77 காலை அய்யனார் நீர்வீழ்ச்சியில் நீராடி மீண்டும் இராஜ பாளையம் வந்தனர். இராஜபாளையம் அன்பர்கள் தலைவர் அவர்களை அன்போடு வரவேற்று குருசுவாமி கோவில் பிரார்த்தனை மண்டபத்தில் நிகழ்ச்சி அமைத்துக் கொடுத்தனர். திரு. சா. பெ. தனுஷ்கோடிராஜா அவர்கள் வரவேற்புரைக்குப் பின்னர் சுவாமியவர்கள் 'பக்தி' எனும் பொருளில் அருளுரையாற்றினார்கள். திரு. பூ. அ. பொருமாள் ராஜா அவர்கள் நன்றியுரை நவின்றார்.

விருதுநகர் இந்துசமய வளர்ச்சிக் கழகம்

இராஜபாளையம் விடுத்து மீண்டும் விருதுநகர் வருகைதந்த சுவாமிஜி அவர்கள் 16—11—77 மாலை 6 மணிக்கு இந்து சமய வளர்ச்சிக் கழகத்தில் 'முருகன் பெருமை' என்னும் பொருளில் வேதாந்த விளக்கச் சொற்பொழிவு ஆற்றினார்கள். திருமதி V. அமிர் தம்மாள் (இ. ச. வ, கழகத் தலைவர்) வரவேற்புரையும், செயலாளர் திருமதி மகமாயம்மாள் நன்றியுரையும் ஆற்றினார்கள்.

ஆலயக் கிளை அமைப்பு!

17—11—77 பிற்பகல் 3-30 மணிக்கு செயலர் திருமதி K. மகமாயம்மாள் இல்லத்தில் ஆண்கள் பகுதி யோ. ஆ. கிளை அமைப்புக்கூட்டம் நடைபெற்றது. திருவாளர்கள் M.P.A S. நடராஜ நாடார்; S. M. K. சங்கரலிங்க நாடார், V. ஆறுமுக நாடார், S. S. மனோகர், G. தியாகராஜன் B.A., B.L. ஆகிய ஐந்து பேர்கள்கொண்ட குழு அமைக்கப்பட்டது.

அன்னை கஸ்தூரிபாய் காந்தி சேவா சங்கம்

மாலை 6-30 மணிக்கு சங்கத்தில் சுவாமியவர்கள் பேருரை யாற்றினார்கள். ''பாரதப்போரும் ஆன்மீகப் போரும்'' பற்றிய தத்துவ விளக்கக் கூட்டமாக சிறப்புற அமைந்தது. திருமதி. S. புஷ்பம்மாள் அனைவரையும் வரவேற்றார். திருமதி R. சுசிலா நன்றி நவின்றார்.

மேற்படி நாள்களில் சுவாமியவர்களோடு அன்பர்கள் அளவளாவி ஆன்மீக உணர்வு மேலோங்கப் பெற்றுப் பெருமகிழ் வெய்தினர். ஆலய தலைமைச் செயற்குழு உறுப்பினர் திருவாளர் A. S. ஆதிநாராயணன் அவர்களும் உடன் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டார்.

அங்கமும் ஆகம வேதம தோதினும்
எங்கள் பிரானெழுத் தொன் றில் இருப்பது
சங்கைகெட் டவ்வெழுத் தொன் றையுஞ் சாதித்தால்
அங்கரை சேர்ந்த அருங்கல மாகுமே.

இறைவனைப் போற்றி ஓதுகின்ற வேத, ஆகம, புராண, இதிகாசங்கள் அனைத்தையும் ஓதினாலும், எம் முழுமுதல் தலைவனாகிய சிவபெருமான் வெளிப்படுவது அதிசூட்சும பஞ்சாட்சரம் எனும் ஓரெழுத்தில்தான்! அவ்வுண்மையினைச் சிறிதும் ஐயம் கொள்ளாது மேற்கொண்டு ஒழுகினால், இவ்வுடம்பாகிய அழகிய மரக்கலம், முத்தியெனும் கரையைச் சேரும்.

—திருமந்திரம்.

அறிவிப்பு!

யோகாசன ஆலய விஜயம் சந்தாதாரர்க்கு,

1977 ஆம் ஆண்டின் சந்தா தொகை இம் மாதம் டிசம்பரோடு முடிந்து விடுகின்றதாகையால் அடுத்த ஆண்டிற்கான சந்தாவைச் செலுத்திப் புதுப்பித்துக் கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: ஜனவரி மாதம் சந்தா செலுத்துபவர்க்கு டிசம்பர் வரையும் ஜூன் மாதம் செலுத்துபவர்க்கு மே மாதம் வரையிலும் விஜயம் அனுப்பி வைக்கப்படும். முகவரி மாற்றமடைந்தால் உடன் தெரிவிக்கவும்,

ஆண்டு சந்தா ரூ. 4-00 ஆயுள் சந்தா ரூ. 50-00

அனுப்பவேண்டிய முகவரி :—

C. இராமசாமி,
9/4, கிருஷ்ணபுரம்,
கோடம்பாக்கம்,
சென்னை-600094.

மேனேஜர்,
S. கண்ணப்பன்.

Edited & Published by Sri N. Gurulingam, Pracharagar, Yogasana Alayam, 9-4, Krishnapuram, Kodambakkam, Madras-600094. Printed by Sri C. M. Sivaraman, at T. G. Sambandam & Co., Counian Press, 41, Broadway, Madras-600001 (December-1977)